

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு விழுப்புரத்தில் உள்ள வள்ளலார் மடத்தில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி துவக்கி வைத்தனர். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றிய செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு ராஜா, பி.வி.ஆர்.சு.விஸ்வநாதன், நகர செயலாளர்கள் சர்க்கரை, பேரூர் செயலாளர் பா.ஜீவா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம், பெருந்துறை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் விஜயமங்கலம் மேக்கூரில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக கண்டன பொதுக்கூட்டம் பெருந்துறை தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.சாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் போடி காமராஜ், குடியாத்தம் அன்பு, கழக தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் – பெருந்துறை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளையொட்டி – ‘பொங்கல் உழவும் மரபும்’ என்ற தலைப்பில்

# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, பிப்.12-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு ‘பொங்கல் உழவும் மரபும்’ என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பல்வேறு வகையான போட்டிகளில் வெற்றி பெற்ற 36 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

அய்யன் திருவள்ளுவர், “சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்” என்கிறார். அதாவது, உலகம் பல தொழில் செய்து துன்புற்றாலும் இறுதியில் உழவுத் தொழிலே சிறந்தது என்பது அவரது திடமான கருத்து. விவசாயம் செழித்தால் மட்டுமே மனிதர் வாழ்வு மேன்மையுறும். நமது மரபையும் வாழ்வியலையும் பறைசாற்றும் பொங்கல் திருவிழா நீண்ட நெடுங்காலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

விவசாயம், இயற்கை, கதிரவன், உழவுக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகள் ஆகியவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், மரபையும் - உழவுத்தொழிலையும் கொண்டாடும் வகையிலும் பொங்கல் விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம்.

நமது நீண்ட மரபையும், விவசாயம், கால்நடைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பது நமது கடமையாக உள்ளது. பொங்கல் என்பது வெறும் விழா மட்டுமல்ல, அது ஒரு பண்பாட்டின் அடையாளம் என்பதை மாணவர்கள், இளைஞர்கள் புரிந்து தெளிவு பெறுவதற்கு பொங்கல் விழா உதாரணமாக உள்ளது.

நமது பண்பாட்டு விழுமியங்களான, வீரம், கொடை, உழைப்பு ஆகியவற்றை உணர்த்தும் இந்தப் பொங்கல் திருநாளுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் கோலப் போட்டி, ஓவியப் போட்டி, புகைப்படப் போட்டி, ரீல்ஸ் போட்டி, பாரம்பரிய உடைப் போட்டி, மண்பானை அலங்கரித்தல் போட்டி, சுயமிப் போட்டி ஆகிய கலைப்போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டியாளர்களிடமிருந்து ஒட்டுமொத்தமாக 6154 படைப்புகள் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டன. அதில் கோலப் போட்டிக்கு 1682 நபர்களும், ஓவியப் போட்டிக்கு 1276 நபர்களும் புகைப்படப் போட்டிக்கு 864 நபர்களும், ரீல்ஸ் போட்டிக்கு, 518 நபர்களும், பாரம்பரிய உடை புகைப்படப் போட்டிக்கு 494 நபர்களும், மண் பானை அலங்கரித்தல் போட்டிக்கு 490 நபர்களும், சுயமிப் போட்டிக்கு 830 நபர்களும் தங்களது படைப்புகளை அனுப்பியிருந்தார்கள். அதில் சிறந்த படைப்புகளை அளித்த 36 நபர்கள் வெற்றி பெற்றவர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (10.02.2025) சென்னை கலைவாணர் அரங்கில், செய்தி மக்கள் தொடர்புத்துறை ஊடக மையம் சார்பில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு ’பொங்கல் உழவும் மரபும்’ என்ற தலைப்பில் பல்வேறு வகையான போட்டிகளில் வெற்றி பெற்ற 36 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜராம், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ். செல்வராஜ் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை உயர் அலுவலர்கள், ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதி மருங்கூர் ஊராட்சி கிழக்கொல்லை மற்றும் அரசடிக்குப்பம் ஊராட்சி சிறுதொண்டமாதேவி மக்கள் நீண்ட நாட்களாக சாலை வசதி வேண்டி கோரிக்கை வைத்தனர். மக்களின் கோரிக்கையை ஏற்று நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் நேரில் சென்று ஆய்வு செய்து அதன் அடிப்படையில் சிறுத்தொண்டமாதேவி பகுதியில் முதலமைச்சரின் சாலை வசதி திட்டத்தின் கீழ் மருங்கூர் ஊராட்சி கிழக்கொல்லை வெள்ளையங்குப்பம் சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், பொறியாளர் சங்கர் தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், மாவட்ட பிரதிநிதி ஜி.ஆர்.ஆடலரசன், ஒன்றிய பொருளாளர் ஐயப்பன், ஒன்றிய துணை செயலாளர் குமார், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பாண்டியன், ஆர்.ராஜேந்திரன் முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ராமகிருஷ்ணன், உதயகுமார், ஊராட்சி செயலாளர்கள் சிவஞானம், ஜனார்த்தனன், கிளை செயலாளர்கள் தட்சிணாமூர்த்தி, ஜெயவேலன் அன்பழகன், தனராஜ், சிவகுமார்,அன்பழகன், கோபாலகிருஷ்ணன், சண்முகவேல், முருகவேல், தில்லைக்கண்ணு, ராமகிருஷ்ணன் முருகையன் சங்கர் ஊராட்சி செயலாளர்கள் சிவஞானம் ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் ராமதாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் !

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, பிப்.12-

நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இன்று (12ம் தேதி) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப. செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்

1. மார்ச் 1 கழகத்தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாள்.

2. நாகை மாவட்டத்தில் பொறுப்பு அமைச்சர் அன்பில்மகேஸ் பொய்யாமொழி நிகழ்ச்சிகள் தொடர்பாக.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வில்லிவாக்கத்தில் தேவி பாலியம்மன் கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, பிப்.12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (10.02.2025) சென்னை, வில்லிவாக்கம், தேவி பாலியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவுற்றபின் ஆகமவிதிப்படி திருக்கோயில்களுக்கு மீண்டும் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்தல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இன்று சென்னை, வில்லிவாக்கம், தேவி பாலியம்மன் திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதி ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 7 திருக்கோயில்களுக்கும், இன்று கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி, தண்டுமாரியம்மன் திருக்கோயில், பேரூர், பட்டீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயில், ஒரத்தநாடு, உலகளந்த பெருமாள் திருக்கோயில், தேனி, கௌமாரியம்மன் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம், வெண்ணிகரும்பேஸ்வரர் திருக்கோயில், மதுரை, உசிலம்பட்டி, ஐராவதீஸ்வரர் திருக்கோயில், கோயம்பேடு, வைகுண்டவாச பெருமாள் திருக்கோயில் போன்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்கள் உட்பட 69 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இதுவரை 2,580 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.தங்கமுத்து
### பிப்ரவரி 12 (2016)



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய மாநாடுகளிலும், போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகம் அறிவித்த சட்ட எரிப்பு போராட்டத்தில் பங்கேற்று மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி மா. பாலகிருஷ்ணன்
### பிப்ரவரி 12 (2010)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**